

# முன்னுரை

# முன்னுரை

## 1. ஆய்வின் இன்றியமையாமை

இட்சுவாகு குலத்தினரால் வழிபாடு செய்யப்பட்ட பெரிய பெருமாள் என்னும் திருவரங்கனை ஆழ்வார்கள் பதின்மரும் பாடியுள்ளனர். திருவரங்கம் திருக்கோயிலில் நாள் வழிபாட்டிலும் விழாக்காலங்களிலும் இசை முக்கிய பங்கு வகிக்கின்றது. இங்கு அந்தந்த காலங்களில் பயன்பட்ட இராகங்கள், தாளங்கள் மற்றும் இசைக்கருவிகள் பற்றியும், இக்கோயிலில் அரையரால் நடத்தப்பெறும் அரையர் சேவை பற்றியும், இசை வளர்த்த தேவரடியார்கள் பற்றியும், திருவரங்கனைப் பாடிய இயலிசைப் புலவர்கள் பற்றியும் இந்த விரிவான ஆய்வு இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. இந்த மரபு முறைகள் மெல்ல மெல்ல மறைந்து வரும் இந்நாளில் இதனைக் காக்கவும் நினைவு கூறவும் இவ் ஆய்வு தேவைப்படுகின்றது.

## 2. கருதுகோள் அமைப்பு

திருவரங்கம் கலை வளர்த்த பீடங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. இசை, நாட்டியம், நாடகம் போன்ற நுண்கலைகள் வழிபாட்டிற்குரிய கலைகளாக விளங்கின என்ற கருதுகோளின் அடிப்படையில் இவ் ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## 3. ஆய்வுப்பரப்பு

திருவரங்கம் கோயிலில் மேற்கொள்ளப்பட்டு வரும் வழிபாட்டு முறைகள், வழிபாட்டில் இசையின் பங்கு, அரையர்களின் கலைத்தொண்டு, அரங்கன் மீது பாடப்பட்ட ஆழ்வார் பாசுரங்கள் மற்றும் இசை வல்லுனர்களின் இசை உருப்படிகள் ஆகியவை இவ் ஆய்வில் ஆய்வுப்பரப்பாக அமைந் துள்ளன.

## 4. ஆய்வின் மூலங்கள்

ஆய்வின் முதன்மைச் சான்றாதரங்களாக 'பாஞ்சராத்திர ஆகமம்', கோயிலொழுகு, ஓலைச்சுவடிகளிலிருந்து நகலெடுக்கப்பட்ட குறிப்புக்கள், கோயிலில் அன்றாட நிகழ்ச்சியைப் பற்றிய ஓராண்டின் நாட்குறிப்பு ஆகியவை அமையும். துணைச் சான்றாதரங்களாக அர்ச்சகர், அரையர் மற்றும் கோயில் முறைப் பணியாளர்கள், இசைக்கருவி இசைப்போர் ஆகிய அறிஞர் பெருமக்களுடன் நடத்திய உரையாடல்கள், திருவரங்கம் பற்றிய ஆய்வேடுகள், கட்டுரைகள் ஆகியன அமையும்

## 5. ஆய்வின் கட்டமைப்பு

இவ் ஆய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாகப் பின்வரும் இயல்களைப் பெற்றுள்ளது.

1. திருவரங்கத் திருக்கோயில் மரபு
2. திருவிழாக்களில் இசையின் பங்கு
3. ஆழ்வார்கள் கண்ட அரங்கன்
4. ஏனைய இயலிசைப்புலவர்களின் படைப்புகள்
5. கவின்மிகு கலைகள்

### 5.1 திருவரங்கத் திருக்கோயில் மரபு

முதல் இயலில் திருவரங்கத் திருக்கோயில் மரபு என்னும் தலைப்பில் திருவரங்கம் கோயிலின் தோற்றம், இதன் வரலாறு, புராணச்செய்திகள், தலச்சிறப்பு, கோயிலின் அமைப்பு, கோயிலின் திருச்சுற்றுகள், இதிலுள்ள தீர்த்தங்கள், நூற்றெட்டுத் திவ்விய தேசங்களில் தலைமைப் பெற்று விளங்கும் காரணம் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

### 5.2 திருவிழாக்களில் இசையின் பங்கு

இரண்டாம் இயலில் திருவரங்கம் கோயிலில் அன்றும் இன்றும் நடைபெறும் வழிபாட்டை நாள் வழிபாடு, மாத வழிபாடு, பெருவிழா என்று

மூன்று வகைப்படுத்தி, அந்தந்த நேரங்களில் நடைபெறும் சடங்குகள், பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள், இசை உருப்படிகள், நடனவகைகள் ஆகியவை ஆராயப்பட்டுள்ளன.

திருவரங்கம் கோயிலில் தேவரடியார்களின் பணியும், அவர்கள் பாடிய இசை உருப்படிகள் மற்றும் ஆடிய நடனங்கள் ஆகியவை ஆகியன கூறட்டுள்ளன. அரையர்கள் ஒவ்வொரு வழிபாட்டிலும் பாடும் பாசுரங்கள் ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

**கள ஆய்வில் கிடைக்கப் பெற்ற திருவரங்கம் வருடமகோத்சவ கீர்த்தனைகள் எனும் பாடல் திரட்டு பின்னிணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளது. இப்பாடல்களின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஒரு சில பாடல்கள் அந்தந்த விழாக்களின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.**

## *5.3 ஆழ்வார்கள் கண்ட அரங்கன்*

ஆழ்வார்கள் வரலாறு, அவர்களின் படைப்புக்கள். நாதமுனிகள் அவற்றைக் கண்டெடுத்துத் தொகுத்த விதம், திருவரங்கன் மீது பாடிய இருநூற்று நாற்பத்தேழு பாசுரங்களில் அரங்கனின் குணநலன்கள், தலச்சிறப்பு, இப்பாடல் களில் பண்கள் மற்றும்இசை பற்றிய குறிப்புக்கள் ஆகியவை ஆராயப் பட்டுள்ளன.

## *5.4 ஏனைய இயலிசைப் புலவர்களின் படைப்புகள்*

ஆழ்வார்களுக்குப் பின் வேதாந்த தேசிகர், பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், அன்னமாச்சாரியார், புரந்தரதாசர், அருணாச்சலக் கவிராயர், முத்துசாமி தீட்சிதர், தியாகராசர், மைசூர் வாசுதேவாச்சார், கனம் கிருஷ்ணையர், பாபநாசம் சிவன், மார்கதரிசி சேஷையங்கார், ஊத்துக்காடு வேங்கடசுப்பையர், அம்புஜம் கிருஷ்ணா போன்றோரின இசைப் படைப்புக்கள் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன. சில உருப்படிகளுக்குரிய சுரதாளக் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

### *5.4 கவின்மிகு கலைகள்*

கவின்மிகு கலைகள் என்ற பகுதியில் கோயிலில் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள், இக்கோயில் சிற்பங்கள், சிற்பங்களில் காணப்படும் இசைக்கருவிகள், நடனக்கலையில் கையாளப்படும் கரணங்கள், இறைவனுக்குச் செய்யப்படும் ஆடை அலங்காரங்கள், மலர் அலங்காரங்கள், காலப்போக்கில் பராமரிக்கப்படாத ஓவியங்கள், இத்தலத்தில் வாழ்ந்த, வாழும் கலைஞர்கள், கலைப்படைப்புக்கள் ஆகியன ஆராயப்பட்டுள்ளன. சிற்பங்கள், நடன முத்திரைகள், இசைக்கருவிகள் ஆகியன புகைப்படங்களுடனும் கணினித் தட்டுடனும் விளக்கப்பட்டுள்ளன.

### *6. நிறைவுரை*

நிறைவுரையில் மேற்கண்ட ஐந்து இயல்களிலுமுள்ள செய்திகள் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன.இதில் கீழ்க்கண்ட கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

இராமாயணம் மற்றும் ஆகம நூல்கள் திருவரங்கத்தின் தொன்மையைக் கூறுகின்றன. நாதமுனிகள் தொகுத்த ஆழ்வார்களின் பாசுரங்கள் பண்களோடு பாடும் முறையில்லாமல் தேவகானத்தில் பாடப்படுகின்றன. அரசர்கள் பலராலும் கொண்டாடப்பட்ட கோயில் விழாக்கள் தற்காலத்தில் சாதி, மொழி வேறுபாடின்றி, பக்தர்கள் அனைவராலும் கொண்டாடப்படுகின்றன.

ஒவ்வொரு இயலின் இறுதியிலும் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட நூலின் பெயர், நூலாசிரியரின் பெயர், வெளியான ஆண்டு, பக்கம் ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன. பாடல் எண்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தால் அவை லிப்கோ பதிப்பின் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்களின் எண்களாகும். சில பெயர்கள், சொற்கள், சொற்றொடர்கள் கோயில் மரபின்படி கையாளப்பட்டுள்ளன.

## பின் இணைப்பு

பின் இணைப்பில் கீழ்க்கண்டவைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. துணை நூற்பட்டியல்
2. பேரிதாடன சுலோகங்கள்
3. திருவரங்கன் மீது இயற்றப்பட்ட பாசுரங்கள், மற்றும் இசை உருப்படிகள். (சில உருப்படிகள் சுர தாள அமைப்புடன் கொடுக்கப்பட்டுள்ளன)
4. நடன முத்திரைகள், கரணங்கள், பாஞ்சராத்திர ஆகம முத்திரைகள்.
5. அரையர் சேவை, இசைக்கருவிகள், குதிரை வாகனம், தேர்த்திருவிழா, நாட்டுப்புறக்கலைகள் ஆகியன அடங்கிய கணினி வட்டு.
6. அமரர் அரியக்குடி இராமானுச ஐயங்கார் போன்ற புகழ் பெற்ற இசைக்கலைஞர்களின் அரங்கனின் புகழ் பாடும் பாடல்கள் அடங்கிய ஒலி நாடா.